**OPEN ACCESS**

Manuscript ID: TAM-070120225091

Volume: 7

Issue: 1

Month: July

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.04.2022

Accepted: 28.05.2022

Published: 01.07.2022

Citation: Pushpavalli, P. "Nilam Poothu Malarntha Nalil Arasa Vazhvum Paanar Edapeyarchiyum." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 1, 2022, pp. 20–25.

DOI: https://doi.org/10.34293/tamil.v7i15091.

*Corresponding Author: nigisivanigisiva@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Nilam Poothu Malarntha Nalil Arasa Vazhvum Paanar Edapeyarchiyum

**P. Pushpavalli**
*Doctoral Researcher*
*School of Indian Languages and Comparative Literature*
*Tamil University, Thanjavur, Tamil Nadu, India*
*http://orcid.org/0000-0001-8752-0217*

**Abstract**
The man who lived a nomadic life in the early days of the world established his abode in rich areas and established a stable life. Through his exchange of thoughts and ideas many literatures appeared in the settled areas. Literary exchanges took place in Tamil and Malayalam, which are considered to be the twin children of the Dravidian languages. In that way, there has been a need to explore the displacement elements of Panar and Pulavar life through Manojkurur's Nilam Poothu Malarntha Naal, a novel written in Malayalam in modern times, focusing on Sangam literature which proclaims the antiquity of Tamil. The hardships that occur when Panars go from town to town to see the kings, the disparity between the Panars and the poets, the lifestyles of the Panars community, and the political background are the reasons for the migration.

**Key Words:** Politics, Anthropology, Migration, Maheeranum Mayilanum, Columbun, Foreigners.

**References**

1. Parimelazagar Urai. 2016. *Thirukkural*, Chennai, Poompukar Pathipagam.
2. Vazhviyar Kalangiyam. Volume-1, Tanjavur, Tamil University.
3. Manoj Kurur, in Tamil by Jayashree. 2016. *Neelam Poothu Malarntha Naal*, Thiruvannamalai, Vamsi Bukshi.
4. Rashamanikanar, Ma., 2012. *Pathupattu Araiychi*, New Delhi, Sakithya Academy.
5. Subramanian, S.V. 2010. *Sangha Elakiyam*, Volume-3, Chennai, Manivasakar Pathipagam.

# 'நிலம் பூத்து மலர்ந்த நாள்' நாவலில் அரச வாழ்வும் பாணர் இடப்பெயர்ச்சியும்

*ப. புஷ்பவள்ளி*
முனைவர் பட்ட ஆய்வாளர்
இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**ஆய்வுச் சுருக்கம்**

*பண்டைய காலத்தில் நாடோடி வாழ்க்கை வாழ்ந்த மனிதன், வளமான பகுதிகளில், குடியிருப்பை அமைத்து, நிலைத்த வாழ்வை ஏற்படுத்தினான். அவ்வாறு குடியேறியப் பகுதிகளில் சிந்தனை, கருத்துப் பரிமாற்றங்கள் வாயிலாகப் இலக்கியங்கள் தோன்றலாயின. தமிழின் தொன்மையைப் பறைசாற்றும் சங்க இலக்கியத்தை மையமாகக் கொண்டு மலையாளத்தில் படைக்கப்பட்ட நாவலான மனோஜ்குரூரின் நிலம் பூத்து மலர்ந்த நாள் நாவலில் வழியே பாணர், புலவர் வாழ்வியலின் வழி இடப்பெயர்ச்சிக் கூறுகள் ஆராயவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பாணர்கள் மன்னர்களைக் காண ஊர்ஊராகச் செல்லும்போது ஏற்படும் இன்னல்கள், பாணர்களிடமும் புலவர்களிடமும் காணப்படும் ஏற்றத்தாழ்வு, பாணர் சமூகத்தின் வாழ்வியல் முறைகள், அரசியல் பின்புலம் போன்றவை இடப்பெயர்ச்சிக்குக் காரணமாக அமைகின்றன.*

***முக்கியச்சொற்கள்:*** *அரசியல், பாணர் வாழ்வியல், இடப்பெயர்ச்சி, மகீரனும் மயிலனும், கொலும்பன், பிற நாட்டவர், சங்க இலக்கியம்*

## முன்னுரை

இடப்பெயர்ச்சி என்பது தனிமனிதனோ சிறுகூட்டமோ தன் தேவைக்கருதி ஓரிடத்திலிருந்து புதிய இடத்திற்கு இருப்பிடத்தை மாற்றிக்கொள்வதாகும். இடப்பெயர்ச்சி தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ நடைபெறலாம். இடப்பெயர்ச்சி காலச்சூழலுக்கேற்ப மாறுப்பட்டுக் காணப்படுகிறது. மொழி என்பது மக்களின் மனத்தைக் காட்டும் கண்ணாடியாகும். அந்தவகையில் தமிழ்மொழியும் மலையாள மொழியும் நெருங்கிய தொடர்புடையனவாகும். மலையாளத்தில் மனோஜ் குரூர் படைப்பைத் தமிழில் கே.வி. ஜெயஸ்ரீ மொழிபெயர்த்து "நிலம் பூத்து மலர்ந்த நாள்" என்னும் புதினமாகத் தந்துள்ளார். அது சங்க இலக்கியச் செய்தியை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட படைப்பாகும். தமிழ் இலக்கியத்தில் கைதேர்ந்தொருவர் எழுதியதைப் போன்று இப்புதினம் அமைந்துள்ளது. இப்புதினத்தில் பாணர், கூத்தர் போன்றவர்களின் வாழ்வியல் வழி இடப்பெயர்ச்சிக் கூறுகளை ஆராயவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

## இடப்பெயர்ச்சிக் கூறுகள்

எந்தவொரு நிகழ்வும் நடைபெறுவதற்கு சில காரணிகள் உந்துசக்தியாக இருக்கும். இடப்பெயர்ச்சி நடைபெறுவதற்குப் பின்வரும் காரணிகள் இப்புதினத்தின் வழி ஆராயப்படுகின்றன.

1. அரசியல் காரணிகள்
2. பொருளாதாரக் காரணிகள்
3. சமூகக் காரணிகள்

### அரசியல் காரணிகள்

**"குடித்தழீஇ கோலோச்சும் மாநில மன்னன்**
**அடித்தழீஇ நிற்கும் உலகு. (544)**

தன் குடிகளைக் காத்து செங்கோல் ஆட்சி செலுத்தும் மன்னனின் அடியை அனைவரும் நீங்கா அன்பினராக இருப்பர்"[1] என்ற குறள் கருத்துக்கேற்ப ஓர் அரசு மக்களின் வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

"அரசு என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் அடங்கிய ஒரு வகைச் சமுதாய அமைப்பு. மனிதன் தன் இனத்தவரை மனிதரோடு கூடி ஒரு கூட்டமாக (அ) சமுதாயமாக வாழும் இயல்புடையவன். இத்தகைய சமுதாய அமைப்புக்கு இன்றியமையாத் தேவைகளை நிறைவு செய்வதற்காக அதிலுள்ள மக்களால் பின்பற்றப்படும் சட்டவிதிகள், செயல்கள் அதிகாரங்கள் ஆகியவையெல்லாம் அரசியலில் சேரும். ஆகையால் ஒரு வகைப்பட்ட மக்கட் சமுதாயமாகிய அரசு என்ற சமுதாய அமைப்புகள் பொதுத் தன்மைகளைப் பற்றிய செய்தித் திரளே அரசியல் ஆகும்".

டபிள்யூ வில்சன் என்னும் ஆசிரியர் "ஒரு குறிப்பிட்ட நில எல்லைக்குள் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டமே அரசு"[2] மேற்கண்ட கூற்றுக்களின்வழி அரசுக்கும் சமுதாய மக்களுக்கும் உள்ள உறவை அறியலாம்.

"தோற்ற நாட்டை இரத்தச் சக்தியில் மூழ்க வைத்தல், விளைச்சலைத் தீயிடல், கணவனைப் பறிகொடுத்த இளம்பெண்களின் கண்ணீர் புரண்ட கூந்தலை அறுத்தெறிதல் இவை தானே மன்னர்களின் அரசாட்சி"[3] மேற்கண்ட புதினத்தின் கூற்றின் வழி மக்களைக் கட்டாயத்தின் பேரில் இடப்பெயர்ச்சி செய்தமையை அறியலாம். அரச வாழ்வென்பது கனிவும் கொடுமையும் நிறைந்ததாக அமைந்துள்ளது. ஒருபுறம் இதுபோன்ற கொடுமை நிறைந்த ஆட்சியை உடையவராகவும், மற்றொருபுறம் பாணர், புலவர் போன்றவர்களுக்காகத் தன்னுடைய நாடு நகரம் அனைத்தையும் கொடுத்ததை இலக்கியங்களின் வழியாகவும், புதினத்தின் வழியாகவும் அறிய முடிகிறது. மயிலுக்குக் போர்வை தந்தவனாகப் பேகனும், தமிழ் மொழி நீண்டநாள் வாழ வேண்டும் என்று ஔவைக்கு நெல்லிக்கனி தந்த அதியமானையும், இலக்கியங்களில் காணலாம்.

**"நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவ ராடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே"[4]**

என்ற ஔவையின் வரிகள் அரசர்களின் சிறப்புக்களைக் கூறுவதாக அமைந்துள்ளது. போர்க்களத்தில் எதிரிகளைக் கழுத்தறுப்பதிலும், குதிரைகளை அம்பெய்து வீழ்த்துவதிலும் இன்பம் காட்டும் மன்னன். அரண்மனையை அடையும்போது கூத்திலும் பாட்டிலும் விருப்பமுடையவனாக இருப்பது அரசியலில் மிகவும் விசித்தரமான செயலாகப் பார்க்கப்படுகிறது. நாட்டை ஆள்பவர்கள் அறிவுடையவர்களை அருகில் இருக்கச் செய்வது அரசியலின் மர்மம் தானென்று பரணர் வாயிலான அரசியல் சிந்தனைகள் ஆய்வுக்குரியதாக அமைகின்றன.

அரச வாழ்வில் தண்டனைகள் சட்டத்திற்குப் புறம்பாக வழங்கப்படாதது பின்வரும் கூற்றுகள் வழி அறியமுடிகிறது. நன்னனின் தோட்டத்தில் விழுந்த மாம்பழத்தை ஆற்றில் நீந்தி விளையாடிக்கொண்டிந்த சிறுமி எடுத்ததால், அவளுக்கு மரண தண்டனை வழங்கவேண்டும் எனக்கூறுவதும் உறவினர்கள் வேறு ஏதேனும் தண்டனை கொடுக்க கூறுவதும், அதற்கு மன்னன் பின்வருமாறு கூறுவதாக அமைகிறது.

**"மன்னனின் பொருள் திருடப்பட்டால்**
**மரணமென்பதே**
**சட்டம். வேறொன்றும் அதற்கு ஈடாகாது."[5]**

என்ற கூற்றின் வழி சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அரசியல் சிந்தனை புலப்படுகிறது. அரசனின் கொடுங்கோல் ஆட்சிமுறையும் சிறுமி என்ற மனிதாபிமானமற்ற செயலையும் அறியலாம்.

**பாணர்களின் வாழ்வியலில் இடப்பெயர்ச்சி**

பாணர் பற்றிய பதிவுகளை சங்க இலக்கிய பத்துப்பாட்டு நூல்களான ஆற்றுப்படை நூல்கள் வழி அறியலாம்.

> **“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
> **ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
> **பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்**
> **சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கம்”**[6]

என்ற தொல்காப்பியப் புறத்திணையியல் நூற்பா வழி அறியலாம்.

பாணர்கள் பாடல் பாடியும், கூத்தர்கள் ஆடலாலும் தன் வறுமையைப் போக்கி வாழ்ந்து வந்ததை வரலாற்றின் வழி அறியலாம். “பாடல் பாடும் பாணரும், ஆட்டம் ஆடும் கூத்தருமே நாங்கள். அயல்தேசம் போகும் வழியில் இங்கே வந்தோம்”[7] என்பதிலிருந்து பாணர்களின் தொழிலும், அதன் காரணமாக அவர்கள் இடப்பெயர்ச்சி மேற்கொண்டனர் என்பதும் அறியலாம்.

“கொலும்பன்” தன்னுடைய வறுமையைப் போக்கிக்கொள்ள ஏழிமலைக்குச் செல்லும் போது வழியில் பரணரைச் சந்திப்பதும் அவர் அவர்களை ஆற்றுப்படுத்த நினைக்கும் போது தன் வறுமையைப் பிறர் அறிவதை அவமானமாகக் கருதியதைப் பின்வரும் கூற்றால் அறியமுடிகிறது. “வெட்கப்படாதீர்கள் நானும் உங்களைப்போல ஒரு பாணனே வறுமையிலேயே உழன்றேன். ஆனால் இப்போது அந்த நிலைமையில்லை. பல மன்னர்களைப் புகழ்ந்து பாடினேன். தேவைக்கு அதிகமாகவே அவர்கள் தந்தார்கள்.”[8] தன்னுடைய வறுமை காரணமாக இடப்பெயர்ச்சி செய்ததையும் பாணர், புலவர் இடையே ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டமையும் அறியமுடிகிறது.

கரை வாயிலாகப் பறவைகளும் மனிதர்களைப் போலத் தன் தேவைக்காக இடம்பெயர்ந்து செல்வதைப் பின்வரும் கூற்றின் வழி அறியலாம். ஆற்றோரத்திலிருந்து வயல்களுக்கு, ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப் புறப்பட்ட இடமும் சென்று சேரும் இடமும் நமக்குச் சொந்தமென்று ஆவதில்லையே”[9] இடப்பெயர்ச்சி உயிரினங்கள் அனைத்திற்கும் பொதுவான செயலாக இருப்பதை இப்புதினத்தின் வழியே அறியலாம்.

ஆட்டமும், கூத்தும் தொழிலாக இருப்பினும், சில நேரங்களில் சலிப்பும், வெறுப்பும் ஏற்பட்டாலும் வறுமையின் காரணமாக அத்தொழிலை மேற்கொண்டது பாணர்களின் வாழ்வியல் வழி அறிய முடிகிறது. வறுமையும், பொருளும் தேர்ச்சக்கரம் போல் மாறிமாறி சுழலக்கூடியது. பொருட்கள் யாரிடமும் நிலையாக இருப்பதில்லை என்பதால் வறுமையும் யாரிடமும் நிலையாக இருக்காது என்ற நம்பிக்கை பாணர் வாழ்வியலில் புலப்படுகிறது.

**பிறநாட்டினர் இடப்பெயர்ச்சி**

அரசனின் பாசறைகள் முள்வேலி இடப்பட்டிருந்ததாகவும் முன்னால் யானைகள் காவலிருந்தாகவும், கூடவே அயல் தேசத்துத் திறமையான யவனர் காவல் செய்ததாகவும் புதினத்தின் வழி அறியமுடிகிறது. மற்றவர்களைக் காவலுக்கு வைக்க வேண்டிய அரசியல் பின்புலம் என்ன என்பது ஆய்விற்கு உரியதாகும். அவர் படைவீரர்மீது நம்பிக்கையின்மை காரணமாகக் கூட இருந்திருக்கலாம். இடப்பெயர்ச்சிக்கு மொழியும் நாடும் முக்கியமல்ல என்பது புலனாகிறது.

"யவனர் தந்த வினைமான் நன்கலம்"[10] (அகம்.149) என்னும் பாடலுக்கு அரண் சேர்க்கும் விதமாக பிறநாட்டவர்கள் இங்கு வந்து தங்கி இருந்ததையும், கடல் கடந்து காணப்படும் அயல்நாட்டைச் சேர்ந்தவர்கள். நம் நிறமுடையவர்கள் அல்ல. அவர்களின் மொழி நமக்குப் புரியாது. மேலங்கியும் தலைப்பாகையும் வேறு மாதிரியிருக்கும். நீண்ட சட்டையும் தோலினாலான அரையாடையும் அணிகின்றனர். கடுமையான முரட்டுப் பார்வையை உடையவர்கள் பார்த்தாலே பயந்துவிடுவோம் என வட நாட்டு வீரர்களைப் பற்றிக் குறிப்பிட்டு சென்றமையால் பிற நாட்டு வீரர்கள் இங்கு வந்து தங்கிக் காவல் செய்தது புதினத்தின் வழி அறியமுடிகிறது. இதன் வழியே வாணிகத்தின் பொருட்டு பிறநாட்டு வீரர்களைக் காவலுக்கு வைத்திருந்தமை அறியமுடிகிறது.

## மயிலனும் மகீரனும்

பாணர் சமூகத்தைச் சேர்ந்த மயிலனும், சிறந்த போர் வீரனான மகீரனும் சிறந்த நட்பு கொண்டனர். மயிலனை மகீரன் தன்னுடன் ஒற்று வேலைக்கு அழைத்துச் செல்கிறான். அங்கு, மன்னர் பாரியைக் கொல்ல சதித்திட்டம் தீட்டி கபிலருடைய நட்பைப் பெற்று அவர் வழியே மன்னன் பாரியை மயிலன் வெட்டி வீழ்த்துவதாக கூறப்படுவதிலிருந்து. அரசனை வெல்வதற்குப் புலவரே மறைமுகமாக ஒரு காரணமாக அமைவதைப் புதினத்தின் வழி அறியமுடிகிறது.

மயிலன் பாரியைக் கொல்லும்போது அவன் தந்தையான கொலும்பனையும் கொல்லும் சூழல் ஏற்படுகிறது. பின்னர் வருத்தப்பட்டு தன் தோழன் மகீரனைத் தன் குடும்பத்தைக் காக்குமாறு அனுப்புதலும், மகீரன் மயிலன் சகோதரி சித்திரையைக் காதலித்து திருமணம் செய்துகொண்டு சிலகாலம் அவளுடன் வாழ்ந்து பின்னர் அவளைவிட்டுப் பிரிந்து வேறு ஒருத்தியுடன் வாழ்வதாகப் இப்புதினம் கட்டமைக்கப்பட்டுள்ளது. மயிலனை மகீரன் தன் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டமை பாரியைக்கொல்ல மயிலனுக்கு தூண்டுகோலாக அமைந்தது எது என்பதும் ஆய்விற்கு உரியதாக அமைகிறது. மகீரனின் சூழ்ச்சியால் மயிலனின் வாழ்க்கைச் சூழல், குடும்பச்சூழல் மாற்றம் அடைவதோடு சித்திரையின் வாழ்க்கை நிலையும் கேள்விக்குரியதாக அமைகிறது.

## முடிவுரை

நிலம் பூத்து மலர்ந்த நாள் புதினத்தின் வழி பாணர் சமூகத்தின் இடப்பெயர்ச்சியும், அதனால் அவர் அடையும் துன்பங்களும், அரச வாழ்க்கை முறைகளையும், புலவர்களின் நிலையும், மயிலன் மகீரன் வாயிலான உள் அரசியலையும் புரிந்துகொள்ளும் வகையில் புதினம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

## சான்றெண் விளக்கம்

1. பரிமேலழகர் உரை, திருக்குறள், ப.254.
2. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-1, பக்-651,652.
3. மனோஜ்குரூர், தமிழில் ஜெயஸ்ரீ, நிலம் பூத்து மலர்ந்த நாள், ப.61.
4. மேலது.ப.196.
5. மேலது.ப.253.
6. மா. இராசமாணிக்கனார், பத்துப் பாட்டு ஆராய்ச்சி, ப.45.
7. மனோஜ்குரூர், தமிழில் ஜெயஸ்ரீ, நிலம் பூத்து மலர்ந்த நாள் ,ப.28.
8. மேலது.ப.48.
9. மேலது.ப.73.
10. ச.வே. சுப்ரமணியன், சங்க இலக்கியம், தொகுதி-3 (அகநானூறு), ப.183.

**துணைநூற் பட்டியல்**

1. பரிமேலழகர் உரை. 2016. *திருக்குறள்.* சென்னை, பூம்புகார் பதிப்பகம்.
2. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-1, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம்.
3. மனோஜ் குரூர். 2016. தமிழில் ஜெயஸ்ரீ, நிலம் பூத்து மலர்ந்த நாள், வம்சி புக்ஸ், திருவண்ணாமலை.
4. மா. இராசமாணிக்கனார். 2012. *பத்துப்பாட்டு ஆராய்ச்சி,* புதுடெல்லி, சாகித்திய அகாதெமி.
5. ச.வே. சுப்பிரமணியன். 2010. *சங்க இலக்கியம் தொகுதி-3,* சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.